*Jaya Jaya Sri Sudharshana*

**Global Stotra Parayana Kainkaryam (GSPK)**

# “சுதர்சனம்”

## பிலவ வருடம்
## மாசி மாத வெளியீடு




## கேள்விகளும் GSPK வித்வான்களின் பதில்களும்

**Vol 9 - வெளியீட்டு நாள்-28th Feb 2022**

# கேள்விகளும் பதில்களும் பகுதி

பிலவ வருடம் - மாசி-பங்குனி மாத பஞ்சாங்கம் 3

முன்னுரை 5

ஆசாரம் மற்றும் அனுஷ்டானம் 6

ஸ்த்ரீ தர்மம் 19

பூர்வாச்சார்ய ஸ்ரீ ஸூக்திகள் 20

சம்ப்ரதாயம் காட்டும் நன்னெறிகள் 24

கேள்விகள் கேட்க 25

# பிலவ வருடம் - மாசி-பங்குனி மாத பஞ்சாங்கம்

| தமிழ் தேதி (மாசி/பங்கு) | ஆங்கிலத் தேதி (மார்ச்) | கிழமை | ஜன்ம நக்ஷத்ரம் | ஶ்ராத்த திதி | பண்டிகை/ திருநக்ஷத்ரம் |
|---|---|---|---|---|---|
| 17 | 1 | செவ்வாய் | அவிட்டம் | சதுர்தசி | |
| 18 | 2 | புதன் | சதயம் | அமாவாஸ்யை | |
| 19 | 3 | வியாழன் | பூரட்டாதி | பிரதமை | |
| 20 | 4 | வெள்ளி | உத்திரட்டாதி | துவிதீயை | |
| 21 | 5 | சனி | ரேவதி | திருதீயை | |
| 22 | 6 | ஞாயிறு | அஸ்வினி | சதுர்த்தி | |
| 23 | 7 | திங்கள் | பரணி | பஞ்சமி | |
| 24 | 8 | செவ்வாய் | கார்த்திகை | ஷஷ்டி | |
| 25 | 9 | புதன் | -- | ஸப்தமி | |
| 26 | 10 | வியாழன் | ரோஹினி | அஷ்டமி | |
| 27 | 11 | வெள்ளி | மிருகசீரிஷம் | நவமி | திருக்கச்சி நம்பிகள் |
| 28 | 12 | சனி | திருவாதிரை | தசமி | |
| 29 | 13 | ஞாயிறு | புனர்பூசம் | ஏகாதசி | குலசேகர ஆழ்வார் |
| 30 | 14 | திங்கள் | பூசம் | துவாதசி | ஸர்வ ஏகாதசி, காரடையான் நோன்பு, பெரியாண்டவன் ஸ்ரீ மஹா தேஶிகன் |
| 1 | 15 | செவ்வாய் | ஆயில்யம் | திரயோதசி | ப்ரதோஷம். மாஸ பிறப்பு. காலை பாரணைக்கு முன் தர்பணம் |
| 2 | 16 | புதன் | மகம் | சதுர்தசி | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 17 | வியாழன் | பூரம் | பௌர்னமி | |
| 4 | 18 | வெள்ளி | உத்ரம் | பிரதமை | பங்குனி உத்திரம் |
| 5 | 19 | சனி | ஹஸ்தம் | துவிதீயை | |
| 6 | 20 | ஞாயிறு | சித்திரை | திருதீயை | ஸ்ரீமத் அழகிய சிங்கர் தவன உற்சவம் ஆரம்பம் |
| 7 | 21 | திங்கள் | ஸ்வாதி | சதுர்த்தி | |
| 8 | 22 | செவ்வாய் | விசாகம் | பஞ்சமி | |
| 9 | 23 | புதன் | அனுஷம் | ஷஷ்டி | |
| 10 | 24 | வியாழன் | கேட்டை | ஸப்தமி | |
| 11 | 25 | வெள்ளி | மூலம் | அஷ்டமி | |
| 12 | 26 | சனி | பூராடம் | நவமி | |
| 13 | 27 | ஞாயிறு | உத்ராடம் | தசமி | |
| 14 | 28 | திங்கள் | திருவோணம் | ஏகாதசி | ஸர்வ ஏகாதசி, ஶ்ரவண வ்ரதம் |

# முன்னுரை

"சுதர்சனம்" என்பது ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு நல்வழி காட்டும் ஓர் கையேடு. இந்த இணையவழி கேள்விப்பட்டியல் என்பது, ஸ்ரீவைணவர்களுக்கெழும் சந்தேகங்களைத் தீர்க்கவும், மேலும் சாஸ்த்ரோக்தமான விஷயங்களை நன்கு அறிய வேண்டியும் துவங்கப்பட்ட சிறு முயற்சியே.

இம்முயற்சிக்குப் பெரும் தூணாக நல்ஞானம் பெற்ற மஹாவித்வான்கள் கருணையுடன் முன்வந்து பாகவதர்களின் அனைத்துக் கேள்விகளுக்கும் மிகத்தெளிவாகவும் எளிமையாகவும் விடையளிக்கின்றனர். அவர்களின் பதில்களைத் திரட்டித் தொகுத்து, ஸத்ஸம்ப்ரதாய நன்நெறிகளை அறியவும், அதன்படி நடக்கவும், நம்பகத்தன்மை மிக்க ஒரு சிறந்த வழிகாட்டியாக இருக்கும் இந்த "சுதர்சனம்".

இப்பதில்கள் ஒவ்வொன்றும் அதிகாரப்பூர்வமான ஒன்றாகவும், துல்யமான ஒன்றாகவும் இருக்கும். இது ஸம்ப்ரதாயத்தின் படி வாழ முயல்பவர்கள் பின்பற்றக் கூடிய ஓர் உயர் நூலாக விளங்கும். இதில் கூறிய சில வழிமுறைகள், இன்றைய சூழலில் சிலரால் பின்பற்ற முடியாமல் போகலாம், அப்படியிருந்தால் அந்த பாகவதர்கள் தங்கள் தங்கள் குடும்ப பெரியவர்களின் நடைமுறையைப் பின்பற்றும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சுதர்சனம் - "ஸ்ரேஷ்டமான பகவத் இராமனுஜ தர்சனத்தைக் காட்டும் நல்வழி"

# ஆசாரம் மற்றும் அனுஷ்டானம்
## (கேள்விகளும் - பதில்களும்)

**Q25MASI21001**

வீட்டில் மற்றும் கோவிலில் இருக்கும் சாளக்கிராம மூர்த்திக்குத் திருமஞ்சனம் செய்தபிறகு சந்தனம் சாற்றலாமா? (நிறைய மூர்த்தங்கள் உள்ளன). துளசியும் சாற்றுவேன்.

**Vidwan`s reply**

இதில் சந்தேகமே வேண்டாம். வீட்டில் மற்றும் கோவிலில் இருக்கும் சாளக்கிராம மூர்த்திக்குத் திருமஞ்சனம் செய்தபிறகு சந்தனம் தாராளமாக சந்தனம் சாற்றலாம்.

நிறைய மூர்த்தங்கள் இருந்தால் எல்லாருக்குமே சந்தனம் சாற்றுவது விசேஷம் என்று பெரியோர்கள் சொல்வதுண்டு. ஒரு மூர்த்திக்கு மட்டும் சாற்றி மற்ற மூர்த்திகளுக்குச் சாற்றாமல் இருப்பது அவ்வளவு சரியாகத் தோன்றவில்லை. தூபம் தீபம் என்றால் எல்லா மூர்த்திகளுக்கும் பொதுவாக ஆகிவிடும். ஆனால் சந்தனம் என்பது அப்படியில்லை, அதனால் எல்லா மூர்த்திகளுக்கும் சாற்றுவதே விசேஷம். அதனால் திருமஞ்சனம் ஆனபிறகு அந்த க்ரமத்தில் சந்தனம் ஸ்மர்ப்பிக்கலாம்.

**Q25MASI21002**

கோவிலில், ஒரே பவித்திரத்தைச் சில நாட்களுக்கு மீண்டும், மீண்டும் பயன்படுத்தலாமா?

**Vidwan`s reply**

கோவிலில் ஒரே பவித்ரத்தைச் சில நாட்களுக்கு மீண்டும் மீண்டும் பயன்படுத்தலாம் என்று ஆகமங்களில் இருக்கின்றது.

பெருமாளுக்கு ஸமர்ப்பிக்கும் வஸ்துக்களில் ஸ்திர வஸ்துகள் என்று சில உள்ளன, அவற்றைப் பெருமாளுக்கு அடுத்தடுத்து ஸமர்ப்பிக்கலாம் என்று இருக்கிறது.

**Q25MASI21003**

அடியேன் க்ருஹத்தில் ஒரு சாளக்கிராமமும் , ஒரு துவாரகா லக்ஷ்மியும் தனித்தனியாக ஏளியிருக்கிறார்கள். இரண்டு பேருக்கும் சேர்ந்தே திருமஞ்சனம் செய்யலாமா? அடியேனுடைய பர்த்தாதான் திருவாராதனை செய்கிறார்.

**Vidwan`s reply**

இரண்டுபேருக்கும் சேர்ந்தே திருமஞ்சனம் செய்யலாம். சாளக்கிராம திருமஞ்சனம் போல் துவாரகாமூர்த்தி திருமஞ்சனமும் அவரின் தீர்த்தமும் விசேஷமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

**Q25MASI21005**

அடியேனுக்கு ஸம்ஸ்க்ருதம் தெரியாது, ஆனால் தேஶிகன் ஸ்லோகங்கள், ஸஹஸ்ரநாமம், பாதுகாஸஹஸ்ரம் ஆகியவற்றைத் தினமும் பாராயணம் செய்வேன். அடியேனுக்கு ஸம்ஸ்க்ருதத்தில் உள்ள சம்யுக்தங்களின் பயன்பாடு தெரியாததால் நிறைய தவறுகள் இருக்கும்.அடியேனுக்கு அறுபது வயதுக்கு மேல், ஸம்ஸ்க்ருதம் படிக்க முடியாது. தினப்படி வாழ்க்கையில் பலவற்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள முடியாமல் மறந்து போய்விடுகின்றேன். ஆனால் அடியேனுக்கு அனைத்து ஸம்ஸ்க்ருத ஶ்லோகங்களையும் சேவிக்க ஆசை. நான் தவறாக உச்சரித்தால் எனக்கு க்ஷமாபணம் உண்டா?

**Vidwan`s reply**

கூடியவரை தவறு இல்லாமல் சொல்வது விசேஷம்.

கொஞ்சம் தவறிருந்தால் அதில் ஒன்றும் தோஷமில்லை. ஆனால் அதைத் திருத்திக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

அதுவே வேதத்திற்கும் , ஸ்தோத்ரத்திற்கும் இருக்கும் வித்தியாசம். வேதத்தில் ஸ்வரம் தப்பினாலோ, அக்ஷரங்கள் தப்பினாலோ, தோஷமாகும். இதில் அப்படிக் கிடையாது. குறிப்பாக ஸஹஸ்ரநாமத்தின் கடைசியில்

"யத$_3$க்ஷர பத$_3$ப்$_4$ரஷ்டம் மாத்ரஹீனம் து யத்$_3$ப$_4$வேத்
தத் சர்வம் க்ஷம்யதாம் தே$_3$வா நாராயண நமோஸ்துதே"

என்று சொல்லி பெருமாளிடம் நமஸ்காரம் பண்ணி ஏதாவது தவறு இருந்தால் மன்னிக்க ப்ரார்த்திப்பதற்கு இருக்கின்றது. இப்படிச் சில ஸ்லோகங்களில் இருக்கும். அப்படி இல்லாவிட்டால்கூட நாம் பக்தியுடன் சொல்லும்பொழுது ஒரு குழந்தையினுடைய மழலைச்சொல்லை எப்படிப் பெரியவர்கள் ஏற்றுக்கொள்வார்களோ அதேபோலே பெருமாளும் ஏற்றுக்கொள்வார். அதற்காக அப்படியே சொல்லாமல் ஓரளவு திருத்திக்கொள்ள ப்ரயத்தனம் பண்ண வேண்டும்.

**Q25MASI21006**

சமீபத்தில் என் சம்பந்தி ஸ்வாமி ஶ்ரீ ஆசார்யன் திருவடி அடைந்தார். மாஸ்யம், அமாவாஸை தர்ப்பணம் இரண்டும் செய்ய வேண்டுமா? மாஸ்யம் செய்வதால் அமாவாஸை தர்ப்பணம் செய்யத்தேவையில்லை என்று சில வாத்தியார்

சொல்கிறார்கள். என் ஜாமதாவின் சந்தேகத்தை தயவுசெய்து தெளிவுபடுத்த ப்ரார்த்திக்கிறேன்.

**Vidwan`s reply**

மாஸ்யம், அமாவாஸை தர்ப்பணம் இரண்டும் செய்ய வேண்டும். மாஸ்யம் செய்வதால் அமாவாஸை தர்ப்பணம் செய்யத்தேவையில்லை என்பதெல்லாம் கிடையாது. மாஸ்யம் முடித்துவிட்டு பின்பு அமாவாஸ்யை தர்ப்பணம் கண்டிப்பாகச் செய்ய வேண்டும்.

**Q25MASI21007**

எங்கள் வீட்டில் 3 ஹிரண்யகர்ப சாளக்கிராமம் உள்ளது. எனது பர்த்தா நித்யமும் பால் மற்றும் ஜலம் கொண்டு திருவாராதனம் செய்து வருகின்றார். கடந்த சுதர்சனத்தில் 1 அல்லது 4 அல்லது அதற்கு மேல் சாளக்கிராமம் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. 3 சாளக்கிராமங்களுக்குத் திருவாராதனம் செய்யலாமா தெளிவுபடுத்த ப்ரார்த்திக்கின்றேன்.

**Vidwan`s reply**

3 ஹிரண்யகர்ப சாளக்கிராமம் இருந்தால் அவற்றில் ஒரு சாளக்கிராம மூர்த்தியை ப்ரதானமாக வைத்துக்கொண்டு , மற்றவர்களை அப்ரதானமாக பக்கத்தில் ஏளப்பண்ணிக்கொள்ள வேண்டும். ப்ரதானமானவருக்கு நாம் விசேஷமான திருவாராதனம் பண்ணலாம். பெருமாள் சங்கல்பத்தில் நான்கு சாளக்கிரமங்கள் ஏளிய பின் அனைவருக்கும் விசேஷமான திருவாராதனம் பண்ணலாம்.

**Q25MASI21008**

ஓய்வுக்குப் பிறகு பகவத் கீதை, பாகவதம், சுந்தரகாண்டம் போன்றவற்றைக் கற்றுக்கொண்டேன். நான் தினமும் ஸ்ரீ விஷ்ணுசஹஸ்ரநாமம் பாராயணம் செய்வேன். முந்தைய சுதர்சனத்தில், ஸ்த்ரீகள் ஸ்ரீவிஷ்ணு சஹஸ்ரநாமம் படிக்கக் கூடாது என்று விளக்கப்பட்டுள்ளது . நான் 1000 நாமங்களை பகவத் ப்ரீதியினால் சங்கல்பம் மற்றும் பலஸ்ருதி இல்லாமல் பாராயணம் செய்கிறேன். பகவத் ப்ரீதியினால் பெண்கள் பகவத் கீதை, சுந்தரகாண்டம் மற்றும் பாகவதம் ஆகியவற்றைப் படிக்கலாமா என்பதைத் தயவுசெய்து தெளிவுபடுத்தவும்.

**Vidwan`s reply**

ஶாஸ்த்ரத்தைக் கட்டுப்பாட்டோடு கடைப்பிடிக்க வேண்டும் என்று நினைத்தால் அப்பொழுது சுந்தரகாண்டம் முதலானவற்றை ஸ்த்ரீகள் பாராயணம் பண்ணக்கூடாது. ஆனால் நாம் எத்தனையோ விஷயங்களில் அந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி

கொண்டுதான் இருக்கின்றோம். அதனால் அந்தரீதியில் சிலர் இதையும் தளர்த்திக் கொள்கிறார்கள்.

ஶாஸ்த்ரப்படி பார்த்தால் சுந்தரகாண்டத்தில் கதைகள் இருக்கின்றது அவற்றை நாம் படிக்கலாம். காலக்ஷேபமாக கேட்கலாம். மற்றவரைப் படிக்கச்சொல்லி கேட்கலாம். ஆனால் மூல க்ரந்த பாராயணம் என்பதைதான் ஸ்த்ரீகள் சேவிக்கக்கூடாது என்று ஶாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

**Q25MASI21010**

பெருமாளுக்கு அமுது கண்டருளப் பண்ணும் பொழுது, திருத்துழாயை எல்லாவற்றிலும் சேர்க்க வேண்டுமா அல்லது சாதத்தில் மற்றும் சேர்த்தால் போதுமா? உப்பு பதார்த்தங்களில் சேர்க்கலாமா?

**Vidwan`s reply**

பெருமாளுக்கு அமுது கண்டருளப் பண்ணும்பொழுது, திருத்துழாயை எல்லாவற்றிலும் சேர்க்க முடிந்தால் சேர்க்கலாம். அல்லது ப்ரசாதத்தில் மட்டும் சேர்த்தாலும் ஒன்றும் தவறு இல்லை. கோவில்களில் திருத்துழாய் மற்றும் புஷ்பங்களை எல்லாவற்றிலும் சேர்ப்பது வழக்கமுண்டு.

**Q25MASI21011**

மஹா ப்ரதோஷத்தன்று கடை பிடிக்க வேண்டிய விதி முறைகள் என்ன? அச்சமயத்தில் ஸ்தோத்ரப் பாடங்களைச் சேவிக்கலாமா?

**Vidwan`s reply**

மஹாப்ரதோஷத்தன்று மௌனமாக இருப்பது முக்கியமானதாகும் என்று சொல்லியிருக்கிறது. ஆசாரியர்கள் மஹாப்ரதோஷத்தன்று மௌனமாக இருப்பார்கள். அதுவே ப்ரதானமாக சொல்லப்பட்டிருக்கிறது.

அன்று மௌனம் தான் கைங்கர்யம் என்பதினால் ஸஹஸ்ரநாமமோ, ஸ்தோத்ர பாடமோ, ப்ரபந்தமோ சேவிக்கக்கூடாது.

**Q25MASI21012**

.ஒரு ப்ரபன்னன் தன் ஶரீரத்தை விட்டுப்புறப்பட்டவுடன் எப்போது ஸ்ரீவைகுண்டத்தை அடைவான்? இப்படி இவன் அடைகிறான் என்பதை ஆழ்வார் ஆசார்யர்கள் எந்த ஸ்ரீ ஸூக்திகளில் குறிப்பிட்டுள்ளார் என்பதையும் விளக்கப் ப்ரார்த்திக்கிறேன்.

**Vidwan`s reply**

ஒரு ப்ரபன்னன் தன் ஶரீரத்தை விட்டுப்புறப்பட்டவுடன் ஸ்ரீவைகுண்டத்தை அடைவதற்கான குறிப்பிட்ட நாளோ நேரமோ, தேதியோ கணக்கு கிடையாது. நேரம்

ஆனவுடன் அர்ச்சிராதி கதியில் போய் ஸ்ரீ வைகுண்டத்தைச் சீக்கிரமே அடைந்து விடுகிறான். அதற்கு விளம்பம் கிடையாது என்று மாத்திரம் சொல்லியிருக்கிறது.

ஆழவார் ஆசாரியர்கள் ஸ்ரீஸூக்திகளில் ஸ்ரீவைகுண்டம் போவது பற்றி ஸ்ரீபாஷ்யத்தில் இருக்கிறது. மற்றும் "சூழ்விசும்பணி முகில், முனியே நான்முகனே" முதலான பாசுரங்களிலும் பார்க்கலாம்.

**Q25MASI21014**

அடியேனுக்கு ஆசார்யன் அனுக்ரஹத்தினால் ப்ரபத்தி ஆகிவிட்டது. ஶரணாகதி செய்தவர்கள் பாகவத அபசாரம் படக்கூடாது என்று நம் பெரியோர்கள் வலியுறுத்துகின்றனர். அடியேனுக்கு இதில் ஒரு சந்தேகம். பாகவத அபசாரம் என்று எவற்றைக் குறிப்பாக ஶாஸ்த்ரம் கூறுகிறது? பிறகு யார் பாகவதர்கள் என்று நம் ஸம்ப்ரதாயம் கூறுகிறது? ப்ரபத்தி ஆகி உண்மையான ஸ்ரீவைஷ்ணவர்களாய் இருப்பவர்கள் மட்டும் தானா? அல்லது எம்பெருமானிடம் போல் பிற தேவதாந்திரங்களிடமும் பக்தி கொண்டவருமா? கேள்வியில் தோஷம் இருந்தால் க்ஷமிக்கவும்.

**Vidwan`s reply**

பகவானை சேவிப்பவர்கள் எல்லோருமே பாகவதர்கள்தான். ஸமாஶ்ரயணம் ஆனவர்கள் பாகவதர்கள். பரந்யாஸம் ஆனவர்கள் பாகவதர்கள். நெற்றியில் திருமண்காப்பு இட்டுக்கொள்பவர்கள் பாகவதர்கள். அப்படிப் பார்க்கும்பொழுது பகவானைச் சேர்ந்த பகவத்பக்தர்கள் எல்லோருமே பாகவதர்கள்தான். அதனால் பொதுவாக யாரிடமும் அபசாரம் பண்ணாமல் இருக்கவேண்டும்.

பாகவதர் என்றால் என்ன லக்ஷணம், அவர் சரியாக இருக்கிறார, அவர் ஸ்ரேஷ்டமான பாகவதரா என்றெல்லாம் நாம் பார்க்கத் தேவையில்லை. பாகவத அபசாரம் நாம் படக்கூடாது என்பதுதான் முக்கியமே தவிர இவையெல்லாம் முக்கியமில்லை. அதனால் எப்படிப்பட்ட பாகவதராக இருந்தாலும் சரி அவரிடம் அபசாரப்படாமல் இருக்க வேண்டும் . அதுவே ஸ்ரேஷ்டம் என்று வைத்துக்கொள்ள வேண்டும்.

**Q25MASI21015**

தலைமுடி க்ஷெளரம் செய்த பின்னர் ஒவ்வொரு முறையும் பூணூல் மாற்றுவது அவசியமா? அடியேன் தினமும் பெருமாள் திருவாராதனம் செய்கின்றேன், அதனால் இச்சந்தேகம்.

**Vidwan`s reply**

க்ஷெளரம் செய்துகொள்ளும்பொழுது பண்ணுகிறவருடைய கையோ, ஆயுதமோ, அவர் தெளிக்கக்கூடிய ஜலமோ அல்லது அவர் போர்த்தக்கூடிய

வஸ்திரமோ பட்டு பூணூல் அசுத்தம் ஆகிவிடுகிறது. பூணூல் என்பது எப்போதுமே சுத்தமாக இருக்க வேண்டும்.

சுத்தமுடைய யக்ஞோபவீதத்துடன்தான் நாம் அனுஷ்டானங்களைப் பண்ணவேண்டும். அசுத்தியானால் பூணூல் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக்கணக்கில் தான் க்ஷௌரம் செய்துகொண்டால் யக்ஞோபவீதம் மாற்றிக்கொள்ள வேண்டும் என்று ஶாஸ்த்ரம் சொல்கிறது.

**Q25MASI21016**

இந்தக் குழுமத்தில் சேர்வது எப்படி?

**Vidwan`s reply**

இந்தக் குழுவில் சேர தாங்கள் தங்கள் கைபேசியில் Telegram appஐ பதிவிறக்கம் செய்துவிட்டு, கீழ்க்கண்ட linkஐ click செய்யவும்

https://t.me/GSPKSudarsanam

எங்களின் இன்னும் பிற குழுமங்கள் பற்றி அறிய இங்கே சேரவும்.

https://t.me/dgspk

https://t.me/gspkstotras

https://t.me/sampradayamanjari

**Q25MASI21018**

ஏன் நாம் 4 முறை நமஸ்காரம் செய்கிறோம்?

**Vidwan`s reply**

அதற்கு ஒரேபதில் என்னவென்றால் ஶாஸ்த்ரத்தில் அப்படித்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

அதாவது பெருமாளுக்கு நாம் செய்யக்கூடிய கைங்கர்யங்கள் என்று பார்க்கும்போது ப்ரதக்ஷிணம், ப்ரணாமம், அஞ்சலி இவையெல்லாம் என்று ஶாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஶாஸ்த்ரத்தில் ஒவ்வொன்றும் எப்படி பண்ணவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ப்ரதக்ஷிணம் என்றால் எத்தனை தடவை பண்ண வேண்டும், எப்படிப் பண்ணக்கூடாது , ஓடிக்கொண்டு பண்ணக்கூடாது என்றெல்லாம் ஶாஸ்த்ரம் சொல்கிறது. அஞ்சலி எப்படி பண்ணவேண்டும், ஏக ஹஸ்தாஞ்சலி பண்ணக்கூடாது என்றும் இருக்கின்றது.

அதேபோல் ப்ரணாமத்தை பற்றி சொல்லும் பொழுது இரட்டைப்படையில் தான் பண்ணவேண்டும், "प्रदक्षिणान् प्रणामान्श्च युग्मानेव समाचरेत्। ப்ரதக்ஷிணான் ப்ரமாணான்ஶ்ச யுக்மானேவ ஸமாசரேத்" என்று சொல்லி, அதற்கு காரணமும் சொல்லுகிறது.

பெருமாளுக்கு எல்லாமே இரட்டைப் படையில் தான் இருக்க வேண்டும் ஒற்றைப்படையில் இருப்பது ஸ்ரேஷ்டமில்லை.

பொதுவாக ஒன்று என்பது பித்ருக்களுக்கு. தேவர்களுக்கு வரும்பொழுது இரண்டு தான் வரும். "ஏகாமன்வா: , ஏகாஹிபித்ருனாம், த்ருரன்வா:, த்ருஹிதேவானாம்" என்பது வேதத்தில் மிகவும் ப்ரசித்தம். அதனால் தேவாதிதேவனான பெருமாளுக்கு சுருக்கமாக இரண்டு என்று பண்ணாமல் நான்கு, ஆறு என்று பண்ணலாம். இதில் நிறைய யுக்திகளும் ஸ்வாமி தேஶிகன் சொல்லியிருக்கிறார் .

**Q25MASI21019**

ஜபம் செய்யும் போது நாம் எப்படி எண்ணிக்கை வைத்துக் கொள்வது? ஒவ்வொரு விரலுக்கும் 3 என்று கணக்கிட்டு கொள்வேன். ஆனால் ஒரு விரலுக்கு 2 எண்ணிக்கை மட்டுமே என்று எங்கோ கேள்விப்பட்டிருக்கிறேன். எது சரி?

**Vidwan`s reply**

ஜபம் செய்யும்பொழுது நம் விரல்களில் 10 தடவை எண்ண முடியும்.

சுண்டு விரலில் மூன்று, நாலாவது மோதிர விரல் மேலே, ஐந்தாவது நடுவிரல் மேலே, ஆறாவது ஆள்காட்டி விரல் மேலே, ஏழாவது ஆள் காட்டி விரல் நடுவில், எட்டாவது ஆள்காட்டி விரல் கீழே, ஒன்பதாவது நடுவிரல் கீழே, பத்தாவது மோதிர விரல் கீழே என்று ஒரு ப்ரதக்ஷிணமாக வந்து முடியும். ப்ரதக்ஷிணமாக வரும்பொழுது சுண்டுவிரலிலும் ஆள்காட்டிவிரலிலும் மூன்றும் நடுவிரலும் மோதிரவிரலும் மேலும் கீழும் என இரண்டும் வரும். சொல்லிப் புரிந்துகொள்வதைவிட விஷயம் தெரிந்தவர்களிடம் செய்துகாட்டச் சொல்லியோ அல்லது படத்திலோ பார்த்து புரிந்துகொள்ளலாம்.

**Q25MASI21020**

சமீபத்தில் எங்களுக்கு 10 சாளக்கிராமங்கள் மற்றும் 2 துவாரகா மூர்த்திகள் கிடைக்கும் பாக்யம் பெற்றோம். மூர்த்திகளுக்கு என்ன செய்ய வேண்டும், அவற்றை எப்படி ஏள பண்ண வேண்டும் என்று விரிவாக வழிகாட்ட ப்ரார்த்திக்கிறேன்.

**Vidwan`s reply**

சாளக்கிராமங்கள் மற்றும் துவாரகா மூர்த்திகள் என்று நம் ஆத்துக்கு ஏள்கிறார்களோ (ஒரு நல்ல நாள் பார்த்து என்று அவர்கள் ஏள்கிறார்களோ) அன்று பால் திருமஞ்சனம் செய்து, விசேஷமான தளிகை பண்ணி, அன்று விசேஷமான ஆராதனம் பண்ணவேண்டும். அதன் பின்னர் தொடர்ந்து நித்யபடி ஆராதனை பண்ண வேண்டும்.

**Q25MASI21022**

நம் க்ருஹங்களில் பெருமாள் சன்னதியில் ஆலிலை க்ருஷ்ணர், குழலூதும் க்ருஷ்ணர் விக்ரஹங்களை ஏள பண்ணி வைத்துக்கொள்ளலாமா?

**Vidwan`s reply**

நம் க்ருஹங்களில் பெருமள் சன்னதியில் ஆலிலை க்ருஷ்ணர், குழலூதும் க்ருஷ்ணர் விக்ரஹங்களை தாராளமாக ஏளப் பண்ணி வைத்துக்கொள்ளலாம்.

**Q25MASI21023**

கோஷ்டி நடக்கும்போது சாஷ்டாங்கமாகச் சேவிக்கின்றோம். அப்பொழுது நடுவில் யாராவது நின்று கொண்டு இருந்தால் சேவிப்பது சரியா?

**Vidwan`s reply**

கோஷ்டி நடக்கும்போது சாஷ்டாங்கமாகச் சேவிக்கின்றோம். அப்பொழுது நடுவில் யாராவது நின்றுகொண்டு இருந்தால் அவாளே நகர்ந்துக்கொள்ளணும்,முடிந்தால் நாம் அவர்களைத்தாண்டி நகர்ந்துசென்று சேவிக்கலாம். அது முடியவில்லையென்றால் நாம் கோஷ்டியைச் சேவிப்பதாக நினைத்துக்கொண்டு சேவிக்க வேண்டும். அதில் தவறில்லை.

நாம் சேவிக்கும் பொழுது அவர்கள் வேறு கார்யமாக செல்வார்கள், இல்லை கைங்கர்யபரர்களாக இருப்பார்கள், சில நேரங்களில் இதையெல்லாம் ரொம்ப தீவிரமாக பார்க்கவும் முடியாது. ஆகையால் நமக்கு கோஷ்டியைச் சேவிப்பது மட்டும் தான் லட்சியம் என்பதை நினைத்துக்கொண்டு சேவிக்கலாம்.

**Q25MASI21024**

ஸ்ரீ வைஷ்ணவர்கள் இதர தேவதாந்திரங்களை ஏன் சேவிக்க கூடாது. ஏன் அவர்களுடைய கோவில்களுக்குச் செல்லக்கூடாது? சென்றால் தோஷம் ஏற்படுமா?

**Vidwan`s reply**

எம்பெருமான் என்பவன் தேவாதிதேவன், எல்லோரைக் காட்டிலும் உயர்ந்தவன். அப்படி உயர்ந்த எம்பெருமானைச் சேவிக்கும்பொது மற்ற தேவதாந்திரங்களைச் சேவித்தால் இருவரையும் சமமாகபாவித்ததைப் போல் ஆகிவிடும். அப்படிச் செய்தல் கூடாது.

எம்பெருமான் ரொம்ப ரொம்ப உயர்ந்தவன் என்பதை நாம் என்றும் மறக்கக்கூடாது. மேலும் எம்பெருமானுக்குச் சமமாக மற்ற தேவர்களை நினைத்தால் அது மகா பெரியபாபம். அது அந்தத் தேவர்களுக்கே பிடிக்காது, அவர்களும் அப்படி நினைக்கச் சொல்லவில்லை.

எங்களைச் சேவித்தால் என்ன பலன் என்று தான் சொல்லுகிறார்கள், அவரைவிடப் பெரியவர் அவருக்குச் சமமானவர் என்று சொல்லவில்லை. அந்த எண்ணங்கள் நமக்கு வரவேகூடாது என்பதால்தான் அவர்களுடைய கோவிலுக்குச் செல்லக்கூடாது சேவிக்ககூடாது என்று சொன்னதற்கு ப்ரதான காரணம்.

சிலர் அவர்களைச் சேவித்துச் சேவித்து, பெருமாளைச் சேவித்தால் பலன் ஒன்றும் கிடைக்கவில்லை அவர்களைச் சேவித்தால் தான் பலன் கிடைக்கிறது என்று சொல்ல வாய்ப்பு இருக்கிறது. இவ்வாறு செய்வதெல்லாம் ஸம்ஸார பாபத்தில் போய் முடியும். அதனால் தான் அதை நாம் நினைக்கவேகூடாது. பெருமாள் தான் உயர்ந்தவர் மற்றவர்கள் உயர்ந்தவர்கள் அல்ல என்பதாலும், அவரை மட்டும் சேவிப்பது மற்றவர்களை அவருக்குச் சமமாக கூட நினைக்கக்கூடாது , அவர்களிடம் சமமாக நடந்துகொள்ளக்கூடாது என்பதால் தான் இதர தேவதாந்திரங்களைச் சேவிக்கக்கூடாது என்று சொல்கிறார்கள்.

**Q25MASI21026**

ஸ்ரீ சந்நிதி ஸம்ப்ரதாயத்தின்படி அஷ்டாக்ஷரம், த்வயம் மற்றும் சரம ஶ்லோகங்களுக்கான த்யான ஶ்லோகங்களை அர்த்தத்துடன், அதாவது எந்தத் திருமேனிக்கு எப்படி முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை தெளிவு படுத்த ப்ரார்த்திக்கிக்றேன்.

**Vidwan`s reply**

ஸ்ரீ சந்நிதி ஸம்ப்ரதாயத்தின்படி அஷ்டாக்ஷரம், த்வயம் மற்றும் சரம ஶ்லோகங்களுக்கான த்யான ஶ்லோகங்கள் அர்த்தத்துடன் ,ஸ்ரீமத் அஹோபில மடத்தினால் வெளியிடப்பட்ட ஆஹ்நீக க்ரந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது அதை பார்க்கவும்.

**Q25MASI21027**

அமாவாஸை தர்ப்பணத்துக்கு (வடகலை யஜுர் சம்ப்ரதாயம்) கையில், ஆசனத்தில் எவ்வளவு கட்டைப்புல் வைத்துக் கொள்ள வேண்டும்? தாம்பாளத்தில் இரண்டு வரிசை கிழக்கு மேற்காக எத்தனை பில்கள் வைக்க வேண்டும்?

**Vidwan`s reply**

ஆசனத்தில் பொதுவாக இரண்டு கட்டைப்புல் வைத்துக்கொள்வார்கள் அதில் ஒன்று நுனிப்புல் கூட வைத்துக்கொள்வார்கள். “தர்பேஷு தர்பாம்” என்று சொல்லும் படியினால் இரண்டுக்கும் மேல் வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், இன்னும் நிறைய ஆசனங்கள் 4 என்பதாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறார்கள்.

கிழக்கு மேற்கு என்பதாக வைக்கின்றதும் புக்னத்திற்கு ஆசனமாக இரண்டு இரண்டாக கட்டதண்டமாக வைக்கவேண்டும். அது பித்ருக்களுக்கான ஆசனமாகும்.

**Q25MASI21028**

“திவ்யதேச க்ஷேத்ரங்கள் மற்றும் பிற கோவில்களில் மூலவருக்கும் உற்சவருக்கும் (பெருமாள் உபய நாச்சியார் உட்பட) வஸ்த்ர ஸமர்ப்பணம் செய்வதற்கான நியமங்களைத் தெளிவுபடுத்த ப்ரார்த்திக்கிறேன்.

**Vidwan`s reply**

திவ்யதேச க்ஷேத்ரங்கள் மற்றும் பிற கோவில்களில் மூலவருக்கும் உற்சவருக்கும் (பெருமாள் உபய நாச்சியார் உட்பட) வஸ்த்ர ஸமர்ப்பணம் செய்வதற்கென்றுத் தனி நியமங்கள் கிடையாது. வஸ்த்ரத்தைத் தட்டில் வைத்து அர்ச்சகரிடம் ஸமர்பித்தால் அவ்வூரின் வழக்கத்தின் படி அவர் ஸமர்பிப்பார். அந்தந்த திவ்யதேச வழக்கின் படி வஸ்த்ரங்கள் ஸமர்பிக்க வேண்டும் என்ற நியமம் மட்டும் தான்.

**Q25MASI21029**

அத்யயனம் மற்றும் அனத்யயன காலங்களைப் பற்றி விளக்க ப்ரார்த்திக்கிறேன்.

**Vidwan`s reply**

வேதாத்யயனம் செய்ய கேட்டுள்ளீர் எனக்கொண்டு இப்பதிலை பகிர்கின்றேன். தர்மஶாஸ்த்ரத்தில் இதை விரிவாக சொல்லியுள்ளனர்.

- அத்யயன காலம் என்றால் - படிக்கவேண்டிய காலம்
- அனத்யயன காலம் பொதுவாக அஷ்டமி, சதுர்தசி, அமாவாஸை/பௌர்ணமி மற்றும் ப்ரதமை. இந்த நான்கு தினங்களும் அனத்யயன தினம்.இந்த நாட்களில் வேதாத்யயனம் பண்ணக்கூடாது, சந்தை சொல்லக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள்.
- திவ்ய ப்ரபந்தம்/ஸ்தோத்ர பாடங்கள் பொருத்தவரை, அஷ்டமி, சதுர்தசியில் சொல்வதுண்டு. அமாவாஸை/பௌர்ணமி மற்றும் ப்ரதமை இந்த இரண்டு நாட்களில் சந்தை சொல்லக்கூடாதென்று வைத்துள்ளனர். ஆனால் இந்நாட்களில் பாராயணங்கள் செய்யலாம்.
- அனத்யயன காலம் என்று வேறு நிறைய விசேஷமாகவும் இருக்கின்றது.
- வேத அனத்யயன காலத்தில் நிறைய கணக்குண்டு. அதாவது எத்தனை நாழிகை அஷ்டமி இருந்தாலோ, பௌர்ணமி இருந்தாலோ அது எப்படி என்பதாக. நேரமிருப்பின் பின் நாட்களில் விஸ்தாரமாக பார்க்கலாம்.

**Q25MASI21030**

ஸந்த்யாவந்தனத்தில் துரீய அர்க்யம் எந்தக் காலத்தில் ஸம்பவிக்கும்? - அந்தந்த ஸந்த்யாவந்தன காலத்திற்கு முன்பு ஸந்த்யாவந்தனம் செய்வதாக இருந்தாலா (அ) பின்பு செய்வதாக இருந்தாலா? முன்போ (அ) பின்போ, இவ்வளவு மணி நேரத்திற்குள் ஸந்த்யாவந்தனம் செய்ய வேண்டும் என்ற கணக்குள்ளதா? உதாஹரணமாக காலை ஸந்த்யாவந்தனத்தை விடியற்காலை 4 மணிக்கோ அல்லது 11 மணிக்கோ பண்ணலாமா?.

**Vidwan`s reply**

- ஸந்த்யாவந்தனத்தில் சூர்யோதயம் முன்னர் மூன்று அர்க்யம் ஸமர்பிக்க வேண்டும். சூர்யோதயமாகி விட்டால் காலம் கடந்ததென்று அர்த்தம், அப்போது ப்ராயச்சித்தமாக நான்காவது அர்க்யம் விட வேண்டும். அது தான் துரீய அர்க்யம் என்று பெயர்.
- சூர்யோதயத்திற்கு முன் ஸந்த்யாவந்தனம் செய்வதாயிருந்தால் துரீய அர்க்யம் ஸமர்பிக்க வேண்டியதில்லை.
- அதே போல் சூர்யஅஸ்தமனத்திற்கு முன்னர் அர்க்யம் ஸமர்பித்தால் துரீய அர்க்யம் ஸமர்பிக்கவேண்டியதில்லை.
- சூர்யோதயமும் அஸ்தமனமும் நாளுக்கு நாள் மற்றும் வெய்யில்காலம், மழைக்காலம் என்று காலத்திற்கேற்றார் போலும் மாறிக்கொண்டே இருப்பதால் இவ்வளவு மணி நேரம் என்று சரியாகச் சொல்லமுடியாது.
- ஆகையால் பஞ்சாங்கத்தை வைத்துக்கொண்டு சூர்யோதயம் அஸ்தமனம் எப்போது என்று பார்த்து அதற்கு முன்னர் ஸந்த்யாவந்தனம் செய்து அர்க்யம் விட்டால் துரீய அர்க்யம் ஸமர்பிக்க வேண்டியதில்லை.
- அதிகாலை 4 மணிக்கு ஸந்த்யாவந்தனம் பண்ண முடியாது ஏனென்றால் ஸந்த்யாவந்தனத்தை சூர்யோதயத்திற்கு முன் ஆரம்பித்து சூர்யோதமான பின்னர் தான் உபஸ்தானம் முடிக்கவேண்டும் என்றுள்ளது. சூர்யோதயமாகும் முன்னர் அர்க்யம் விடணும் ஆன பின்னர் உபஸ்தானம் பண்ணவேண்டும் என்றுள்ளது.
- காலை 4 மணிக்குப் பண்ணால் அது அகாலே க்ரியமாணம் அதற்கு மதிப்புகிடையாது. அதனால் மீண்டும் ஸந்த்யாவந்தனம் செய்ய வேண்டும்.
- வேறு வழியில்லாமல் கார்யாந்தரமாக அல்லது வெளியில் பயணம் போய்விட்டு வர நாழியாகிறது என்றால் 11 மணிக்கு துரீய அர்க்யம் ஸமர்பித்துச் செய்ய வேண்டும்.

**Q25MASI21031**

த்வாதசி திருவாராதனம் முடிந்து பாரணை செய்த பின் மாத்யாஹ்நிகம் செய்யலாமா?

**Vidwan`s reply**

த்வாதசி திருவாராதனம் முடிந்து பாரணை செய்தபின் மாத்யாஹ்நிகம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

பாரணைக்கு முன்னர் மாத்யாஹ்நிகம் பண்ணிவிட்டு தான் திருவாராதனம் செய்யப்போகிறோம். ஸந்த்யாவந்தனம், ப்ரம்மயக்ஞம், மாத்யாஹ்நிகம் பண்ணிவிட்ட பின் திருவாராதனம் செய்து பின்னர் பாரணை செய்வதால் மறுபடியும் மாத்யாஹ்நிகம் செய்யவேண்டிய அவசியமில்லை.

அல்ப த்வாதசியில் சிறு வித்யாசம் உண்டு அதைப்பற்றி பின்னர் விரிவாக பார்க்கலாம்.

**Q25MASI21032**

மஹாளய பக்ஷத்தில், ஒரு வேளை மட்டும் சாதம் சாப்பிடவேண்டும் என்கிற நியமம் மஹாளய பக்ஷ ஆரம்ப தினத்திலிருந்து மஹாளய பக்ஷ தர்ப்பணம் தினம் வரையிலா அல்லது பக்ஷம் முழுவதுமா?

**Vidwan`s reply**

- மஹாளய பக்ஷத்தில் 15 நாட்களும் தர்ப்பணம் செய்பவர்கள், 15 நாட்களும் இரவில் பலகாரம் செய்யவேண்டும்.
- அப்படியில்லை ஒரு நாள் தான் தர்ப்பணம் செய்வதென்றால் அதற்கு சக்ருண் மஹாளயம் என்று பெயர், நம்மில் பலர் அதைத்தான் செய்கின்றனர். அப்படி ஒருநாள் தர்ப்பணம் செய்பவர்கள் 15 நாட்களும் பலகாரங்கள் பண்ணவேண்டிய அவசியமில்லை என்பதாக மேல்பாக்கம் ஸ்வாமி சாதித்திருக்கிறார். அதற்கு ஒரு நாள் முன்னர் கூட பலகாரம் என்று அவசியமில்லை எனவும் சாதித்துள்ளார்.
- சில பெரியவர்கள் 15 நாட்கள் தர்ப்பணம் பண்ணவில்லையென்றாலும் 15 நாட்களும் பலகாரம் என்று வைத்துள்ளனர். அவரவர் ஆத்து வழக்கத்தை பின்பற்ற வேண்டும்.
- மஹான்களின் அபிப்ராயப்படி 15 தர்ப்பணம் பண்ணாவிட்டால் 15 பலகாரம் தேவையில்லை என்றுத் தெரிகிறது.
- தர்ப்பண தினத்தன்று எப்படியும் பலகாரம், அதற்கு முதல் நாள் தேவையில்லை என்று இருக்கிறது.

**Q25MASI21034**

யஜ்ஞோபவீதம் செய்யும் முறை, ப்ரதிஷ்டை பண்ண, செய்ய வேண்டிய அநுஷ்டானங்களைத் தெளிவுபடுத்த ப்ரார்த்திக்கிறேன்.

**Vidwan`s reply**

முக்கியமாக பார்த்தால் நாமே பூணூல் நூற்க வேண்டும். நூற்கும் பொழுது அவர்களும் சுத்தமாக இருந்து, பூணூலையும் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். ப்ரதிஷ்டை பண்ணும்பொழுது அதற்கான ப்ரதிஷ்டா விதி என்று க்ரந்தங்களில் இருக்கின்றது. இல்லையென்றால் பெரியோர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

முக்கியமாக மந்திரங்களைச் சொல்லி தேவதைகளை ப்ரதிஷ்டை செய்து,பெருமாளை ப்ரதிஷ்டை செய்து, ஆவாஹனம் செய்து, காயத்ரி மந்திரத்தைச் சொல்லி ப்ரதிஷ்டை பண்ண வேண்டும்.

**Q25MASI21036**

மந்த்ரஸாலகட்ட ஶ்ராத்த ப்ரயோகம் என்றால் என்ன என்று விளக்க ப்ரார்த்திக்கிறேன்.

**Vidwan`s reply**

மந்த்ரஸாலகட்டம் ஸ்வாமி என்று ஒருவர் இருந்தார்.அந்த ஸ்வாமி தர்ம ஶாஸ்த்ரங்களிலே சில தனிப்பட்ட விசேஷமான அபிப்ராயங்கள் வைத்து நிர்ணயம் பண்ணி இருக்கின்றார். அதற்கே மந்த்ரஸாலகட்ட ஸம்ப்ரதாயம் என்று பெயர். அந்த ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்கள் சில பேர் இப்பவும் இருக்கின்றனர். அவர்கள் அதற்கேற்ற மாதிரியான ஸம்ஸ்காரங்கள், ஶ்ராத்தங்கள் இவையெல்லாம் பண்ணிக்கொண்டு இருக்கிறார்கள். அதைப் பண்ணுவதாக இருந்தால் அதைப் பற்றி விஸ்தாரமாக தெரிந்துகொள்ள வேண்டும். இல்லையென்றால் அப்படி ஒரு ஸம்ப்ரதாயம் இருக்கின்றது என்று தெரிந்து வைத்துக்கொண்டால் போதும்.

# ஸ்த்ரீ தர்மம்

## (கேள்விகளும் - பதில்களும்)

**Q25MASI21025**

ரஜஸ்வலை காலத்தின் ஐந்தாவது நாள் ஸ்த்ரீகள் ஶ்ராத்த காரியங்களில் அந்நியா தீட்டு ஸ்நானம் செய்தபிறகு பங்கு எடுத்துக்கொள்ளலாமா?

**Vidwan`s reply**

ரஜஸ்வலை காலத்தின் ஐந்தாவது நாள் ஸ்த்ரீகள் ஶ்ராத்த காரியங்களில் அந்நியா தீட்டு ஸ்நானம் செய்தபிறகு பங்கு எடுத்துக்கொள்ளலாம்.

**Q25MASI21033**

க்ருஹத்தில் புருஷர்கள் இல்லாத நாட்களில், ஸ்த்ரீகள் பெருமாள் பெட்டியை திறந்து (பெருமாளைத் தொடாமல்) தளிகை அம்சை பண்ணலாமா அல்லது பெருமாள் பெட்டியைத் தொடாமல் தளிகை அம்சை பண்ண வேண்டுமா?

**Vidwan`s reply**

ஸ்த்ரீகள் பெருமாள் பெட்டியைத் திறந்து தளிகை ஸமர்பிப்பது என்பது வழக்கத்திலில்லை.

பெருமாள் பெட்டி மரத்தில் இருக்கும், பெருமாள் தான் உள்ளே ஏளியிருக்கிறார், பெருமாளைத் தொடவில்லை என்று இருக்கு அதனால் என்ன தோஷம் வரும் என்று தெரியவில்லை. பெருமாள் ஏளியிருக்கும் பெட்டிக்கு கோவிலாழ்வார் எனும்படியால், அவருக்கே விசேஷமாக ஸந்நிதி முதலானவை இருக்கின்றபடியால் திறந்து ஸமர்பிப்பதை வழக்கத்தில் வைத்துக்கொள்ளவில்லை.

# பூர்வாச்சார்ய ஸ்ரீ ஸூக்திகள்

## (கேள்விகளும் - பதில்களும்)

**Q25MASI21004**

அடியேன் விசிஷ்டாத்வைதத்தை உதாரணங்களுடன் மிக எளிமையாக விளக்குமாறு ப்ரார்த்திக்கிறேன்.

**Vidwan`s reply**

விசிஷ்டம் என்றால் கூடியது, சேர்ந்தது என்று அர்த்தம். அத்வைதம் என்றால் ஒன்று என்று அர்த்தம்.

சகல ப்ரபஞ்சத்தோடும் சகல ஜீவர்களோடும் கூடிய பரமாத்மா நாராயணன் ஒருவனே என்பதே விசிஷ்டாத்வைதத்தின் பொருள்.

பெருமாள் தனியாகவும், ப்ரபஞ்சம் தனியாகவும் இருக்கின்றது என்று அர்த்தம் கிடையாது.

எல்லாப்பொருட்களிலும், எல்லா ஜீவன்களிலும் பெருமாள் இருக்கின்றார். பெருமாள் விசிஷ்டமாக இருக்கின்றார். பெருமாளைத் தனித்து எந்த வஸ்துவும் இருக்கவே முடியாது. அப்படி விசிஷ்டமாக சேர்த்துவைத்து பார்த்தோமேயானால் எல்லாவற்றோடும் சேர்ந்திருக்கக்கூடிய பரமாத்மா ஒருவனே.

லௌகீக உதாஹரணத்திற்கு ஒரு மரத்தை எடுத்துக்கொண்டால் மரத்தில் இலை, பூ, காய், பழம் இருக்கும் . இதைத்தவிர மரத்தின் குணங்களான வாசனை, ரஸம் , பல த்ரவ்யங்கள், எல்லாம் கலந்திருக்கும். இவை அனைத்தையும் சேர்த்தே ஒரு மரம் என்கின்றோம். அதேபோல் சகல சேதனாசேதன ப்ரபஞ்சங்கள் எல்லாவற்றுடனும் சேர்ந்த பரமாத்மா ஸ்ரீமன் நாராயணன் ஒருவன் என்பது தான் விசிஷ்ட அத்வைதம் .

இதைப்பற்றி விஸ்தாரமாக காலக்ஷேபங்களில் கேட்கலாம் அல்லது க்ரந்தங்களில் பார்க்கலாம்.

**Q25MASI21009**

அடியேனுக்கு சமீபத்தில் ஸமாஶ்ரயணம் கிடைத்தது. அதற்கு முன்னர் நான் தென்கலை ஸம்ப்ரதாய தனியன்களையும், உபதேச ரத்தினமாலை போன்ற க்ரந்தங்களையும் புத்தகம் மற்றும் ஒலி மூலம் கேட்டு சேவித்து வந்தேன்.

1. தற்சமயம் வடகலை ஸம்ப்ரதாய ஸமாஶ்ரயணம் கிடைத்த பின்னர் உபதேச ரத்தினமாலையைச் சேவிக்கலாமா?

2. அது வழக்கமில்லை என்றால் வடகலை ஸம்ப்ரதாய குருபரம்பரையைப் பின்பற்ற தமிழில் உள்ள க்ரந்தங்களை அடியேனுக்கு தெரிவிக்க வேணுமாய் விண்ணப்பிக்கிறேன்.

**Vidwan`s reply**

உபதேச ரத்தினமாலை போன்ற க்ரந்தங்களை புத்தகம் மற்றும் ஒலி மூலம் கேட்டு நன்றாக சேவிக்கலாம் . அதில் ஆசாரியர்களைப்பற்றி இருப்பதினால் அதைச் சேவிப்பதில் ஒன்றும் தோஷம் கிடையாது.

வடகலை ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் என்று எடுத்துக்கொண்டால் தேஶிக ஸ்தோத்ரங்கள், தேஶிக ப்ரபந்தம் குறிப்பாக ப்ரபந்த ஸாரம், பிள்ளையந்தாதி ,தேஶிக மங்களம் போன்றவற்றைச் சேவிக்கலாம்.

**Q25MASI21013**

www.sadagopan.org இன் e- புத்தகங்களில் ஒன்றான ஶ்ரீரங்கராஜ ஸ்தவத்தின் உத்திர ஶதகத்தில் உள்ள ஸ்லோகம் 56க்கான தமிழ் மற்றும் ஆங்கில வியாக்கியானம் / விளக்கம குழப்பமாக உள்ளது. கீழ் வரும் ஸ்லோகத்தின் இரண்டாம் பாதியில்

देवीहस्ताम्भुजेभ्यश्चरअणकिसलये समवहद्भयोऽपहृत्य
प्रत्यस्यानन्तभोगं झटिति जलपुटे चक्षुषी विस्तृणानः।
"अक्षिप्योरश्च लक्ष्म्याः स्तनकलशकनत्कुङ्कुमस्तोमपङ्कात्
देवः श्रीरङ्गधामा गजपतिघुषिते व्याकुलः स्तात् पुरो नः"॥

அதில் "மஹாலக்ஷ்மியின் அழகான திருமார்பில் பூசப்பட்டிருக்கும் குங்குமக் குழம்பிலிருந்து அவர் தனது திருமார்பை விடுவித்துக் கொண்டார்" என்று விளக்கம் இருக்கின்றது. தெளிவுபடுத்த ப்ரார்த்திக்கிறேன்.

**Vidwan`s reply**

"மஹாலக்ஷ்மியின் அழகான திருமார்பில் பூசப்பட்டிருக்கும் குங்குமக் குழம்பிலிருந்து அவர் தனது திருமார்பை விடுவித்துக் கொண்டார்" என்பதிற்கான தாத்பர்யம் என்னவென்றால் ப்ராட்டியுடன் பெருமாள் ஏகாந்தத்தில் இருக்கும்பொழுதுகூட கஜேந்திரன் ஆதிமூலமே என்று கூக்குரல் இட்டவுடன் எல்லாவற்றையும் மறந்து பக்தர்களை ரக்ஷிப்பதே ப்ரதானமாக கொண்டு, மற்றது எதுவானாலும் அது அப்ரதானம் என்பதை காண்பிப்பதற்கு ரஸமாகச் சொல்லப்பட்ட வார்த்தையாகும்.

ப்ராட்டியுடன் பெருமாள் ஆலிங்கனத்தில் இருக்கும்பொழுதுகூட அதை பட்டென்று உதறிதள்ளிவிட்டு கஜேந்திரனை ரக்ஷிப்பதற்காக உடனே போனார் என்பதாக, அதாவது ரஸமான வார்த்தை என்கின்ற ரீதியில் அந்த அர்த்தத்தை எடுத்துகொள்ள வேண்டும்.

**Q25MASI21017**

தென்னாசார்ய உபந்யாஸகர் ஒருவர் விஷ்ணு சஹஸ்ரநாமத்தின் 'சுக்லாம் பரதரம்' என்பதை மேற்கோள் காட்டி விஷ்வக்சேனரும் கணபதியும் ஒருவரே என்று கூறினார். இது சரியா?

**Vidwan`s reply**

சுக்லாம் பரதரம் என்பது கணபதியைப்பற்றி என்று ஸ்மார்த்தர்கள் சொல்கின்றனர். விஷ்வக்ஸேனருடைய பரிவாரத்தில் ஒருவர் கஜ முகத்துடன் இருக்கின்றார். கஜானன் என்றே அவருக்கு பெயர். அதனால் அவரை சொல்கிறது என்று சில பேர் சொல்வார்கள்.

சுக்லாம்பரதரம் விஷ்ணும் என்பதினால் சாக்ஷாத் எம்பெருமான் விஷ்ணுவைப் பற்றியே சொல்கின்றது என்று நாம் அனைத்து கர்மத்திலும், அனுஷ்டானத்திலும் இதைச் சொல்லி ஆரம்பிக்கின்றோம்.

**Q25MASI21035**

ஸ்வாமி ஸாதித்த திருக்குருகைப் பிரான் உபன்யாசத்தில் அவர் ஸ்ரீமந் நாதமுனிகள் வம்சம் என்று அறிந்தேன். எனில் இராமானுஜரும் ஸ்ரீமந்நாதமுனிகளின் உறவினரா? பிறகு ஏன் ஆளவந்தார் வரதன் ஆலயத்தில் இராமனுஜரைப் பற்றி திருக்கச்சி நம்பிகளிடம் கேட்டு அறிந்தார்? தெளிவுபடுத்த ப்ரார்த்திக்கிறேன் ஸ்வாமி.

**Vidwan`s reply**

பகவத் இராமானுஜர் ஆளவந்தாருடைய தௌஹித்ரன் ஆகவேண்டும். அதாவது பெண் வயிற்று பிள்ளையாக இருக்க வேண்டும். முதலாவதாக ஆளவந்தார் ஒரு ஸந்யாசியாதலால் அவருக்கு அவருடைய வம்சத்தைப் பற்றி தெரியாமல் இருந்திருக்கலாம். இரண்டாவதாக முற்காலத்தில் பெண் வயிற்றுச் சந்ததிகளுக்கு இப்பொழுது நமக்கு இருப்பது போல் நெருக்கமோ, பழக்கமோ,பரிச்சயமோ இருப்பது கொஞ்சம் கடினமான விஷயம்.நமக்கு இப்பொழுது எல்லா வசதிகளும் உண்டு. பெண்ணைத்திருமணம் செய்துகொடுத்த பின் அவர்களை போய் பார்க்கலாம், அவர்களுடன் தொலைபேசியில் உரையாடலாம். மேலும் பகவத் இராமானுஜர் குருகுலத்தில் இருந்து கொண்டு வித்யாப்யாஸம் பண்ணிக்கொண்டு இருந்தார். இது போல் பல காரணங்கள் இருந்ததாக பெரியோர்கள் சொல்லி கேள்விப்பட்டிருக்கிறேன்.

**Q25MASI21037**

துளசி , விஷ்ணுவுக்கு சாபம் அளித்ததால் சாளக்கிராமமாக அவர் ஆனதாகவும், ஜலந்திரன் எனும் அசுரன் மனைவியாக துளசி இருந்தாகவும் கூறப்படும்

விஷயங்கள், புராணத்தில் உள்ளதா? இதில் விஷ்ணுவின் பெருமைக்குக் குறை போல் இருக்கின்றது தெளிவிக்க வேண்டுகிறேன்.

**Vidwan`s reply**

புராணத்தில் பலவித புராணங்கள் உண்டு. அந்தப் புராணங்களில் இருக்கும் கதைகள் எல்லாம் அப்படியே முழுவதும் சத்தியமாக இருக்க வேண்டும் என்பது கிடையாது. சில வேறுவிதமாக இருந்தாலும், பெருமாளுடைய ஒரு அபிநயம் என்பதாகவும் உண்டு. கிருஷ்ணாவதாரத்தில், சிவனுடைய அனுக்ரஹத்தால் தான் கிருஷ்ணனுக்குக் குழந்தை பிறந்தது என்று இருக்கின்றது. இவையெல்லாம் பெருமாளுடைய அபிநயம் என்று பூர்வாசார்யர்கள் வ்யாக்யானம் பண்ணி இருக்கிறார்கள். அதேபோல் பெருமாள் சிவனுக்குப் பயந்து யக்ஞத்திலிருந்து ஓடினார் என்று இருக்கின்றது. அதுவும் ஒரு அபிநயமே. பெருமாள் அவதாரம் பண்ணும் பொழுது தன் பெருமைகளைச் சுருக்கிக்கொண்டு சில அபிநயங்கள் செய்வதுண்டு. அந்த ரீதியில் பெருமாளுடைய பெருமைக்குக் குறைவு இல்லாமல் நாம் அதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

# சம்ப்ரதாயம் காட்டும் நன்னெறிகள்

## நன்னெறி 1:

பகவான் என்பவர் யார்?

**Vidwan`s reply**

- எவன் ஒருவன் படைத்து, காத்து, உண்டுமிழ்ந்து/சம்ஹாரம் போன்றவற்றைச் செய்கிறானோ (सृष्टि, स्थिति संहारं)
- அவன் தான் ஜகத்காரணனாவான்(**जगत्कारणन्)**.
- யார் ப்ரம்மா, ருத்ரன் போன்ற தேவதைகாளால் துதிக்கப்படுகின்றாரோ
- யார் ஒருவன் இவ்வுலகத்தை தன் ஶரீரமாக கொண்டும், எல்லாவற்றுக்கும் ஆத்மாவாக இருக்கிறானோ
- யார் மோக்ஷம் கொடுக்க அதிகாரியோ

அவன் பகவானாவான்.

பகவான் என்பவனுக்கு ज्ञानं,बलं,ऐश्वर्यम्,वीर्यं,शक्ति,तेजस् என்ற ஆறு குணங்கள் உடையவன். மேலும் பகவான் பற்றி விவரமாக அறிய கீழே உள்ள படத்தை Click செய்யவும்.



# கேள்விகள் கேட்க

தங்கள் சந்தேகங்களை, கீழே உள்ள Formல் பதிவு செய்து அனுப்பினால் வரும் மாதங்களில் GSPKயின் வித்வான்கள் பதிலளிப்பர்.

https://forms.gle/U2tvnfhesWJsfaTz8

மேலும் தங்களின் கேள்விகளின் விடையை அறிய, கீழே உள்ள "சுதர்சனம்" (sudarsanam) என்ற Telegram Channelல் இணையவும்.

https://t.me/GSPKSudarsanam

சம்ப்ரதாய விஷயத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள எங்களின் இதர Telegram Channelகளில் சேர்ந்து பயன்பெறவும்.

https://t.me/dgspk

https://t.me/gspkstotras

https://t.me/sampradayamanjari

தாஸன்

# Dhanyavada:

*Please subscribe to our channels by clicking the logos!*

**@Sudarsanam GSPK**

**@dspkglobal**

**@dgspk**

**@GSPKstotras**

**@GSPKSudarsanam**